# திருவிசலூர் சிவயோகநாதசுவாமி கோயில் ஓர் பார்வை

**க. மகேஸ்வரி**
முனைவர்பட்ட ஆய்வாளர், சிறப்பத்துறை
தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

**மலர்:** 3
**இதழ்:** 4
**மாதம்:** ஏப்ரல்
**வருடம்:** 2019
ISSN: 2454-3993

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் தாலுக்காவில் திருவியலூர் கிராமம் உள்ளது இது காவேரியின் வடகரையில் கும்பகோணத்துக்கு கிழக்கே 8 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது இக்கோயில் முற்காலச் சோழ அரசனான ஆதித்த சோழன் (பொ.ஆ.850-907) காலத்தில் கட்டப்பட்ட கோயிலாகும் முற்காலத்தில் இந்த ஊர் வியலூர் என்றும் வேப்பத்தூர் என்றும் அழைக்கப்பட்டது. இத்தலம் நால்வரில் ஒருவரான திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலமாக விளங்குகிறது.

**பாடல் வரிகள்**

**குரவம் கமழ் நறுமென்குழல் அரிவை அவள் வெருவப்**
**பொருவெங்கரி படவென்று அதன் உரிவை உடல் அணிவோன்**
**அரவும் அலைபுனலும் இளமதியும் நகுதலையும்**
**விரவும் சடை அடிகட்கு இடம்-விரிநீர் வியலூரே**

**வரலாற்றுப் பின்னணி**

செங்கல் தளியாக இருந்த இக்கோயிலில் சோழர் காலத்திலும் அதனைத் தொடர்ந்து வந்த காலத்திலும் கற்களால் புதுப்பித்துக் கட்டியுள்ளனர். பல்லவர் காலத்திலிருந்தே சமயச்சிறப்புடன் விளங்கிய இவ்வூர் மூன்றாம் நந்திவர்ம பல்லவன் (பொ.ஆ.845-869) காலத்தில் வேதம் வல்ல அந்தணர் குடியிருப்பாக் மாற்றம்பெற்று அவனிநாராயணச் சதுர் வேதிமங்கலம் என்று அழைக்கப்பட்டது முதலாம் இராஜராஜ சோழன் காலத்தில் (பொ.ஆ.985-1014) சோழமார்த்தாண்டச் சதுர்வேதிமங்கலம் என்றும் வழங்கப்பட்டது. சோழர் காலத் இவ்வூர் அருகிலுள்ள வேப்பத்தூரின் ஒரு பகுதியாக விளங்கி வந்துள்ளது.

இக்கோயில் இராசராசனது வரலாற்றோடு நெருங்கி தொடர்புடைய திருக்கோயிலாகும் இத்திருக்கோயிலில் இம் மன்னன் தன் இறுதிக் காலத்தில் வரலாற்றுச் சிறப்புடைய “துலாபாரமும்” இரணிய கர்ப்பமும் செய்தான். இதற்கு இவனது தேவியான உலக மாதேவியும் துணை நின்றாள்: தன் எடைக்கு எடை தங்கத்தை (துலாக்கோலில் அமர்ந்து) நிறுத்து

திருவியலூர் பெருமான் முன்பு பல அறக்கொடைகள் நல்கினான். அதேசமயம் இவனது தேவியான உலக மகாதேவி இரணிய கற்பம் ஏறினாள். தங்கத்தால் செய்த பசுவின் வயிற்றில் புகுந்து வெளிவந்து பின்பு அப்பொன்னால் அறக்கொடைகள் நல்குதலே இரணிய கர்ப்பமாகும். இதனைத் திருவியலூர் கல்வெட்டுகள் எடுத்தியம்புகின்றன.

திருவியலூரில் துலாபாரம், ஏம கர்ப்ப அறக்கொடைகள் நல்கிய பின்பு மீதம் இருந்த பொன்னால் இம்மன்னன் தங்கத்தாமரை மலர்களைச் செய்து, அவற்றைத் திருவலஞ்சுழி சேத்திரபாலர் திருவடி முன் இட்டு அட்டித் திருவடி தொழுதான் என்று வலஞ்சுழிக் கல்வெட்டுகள் பதிவாக்கியுள்ளன. இத்தனைச் சிறப்புகள் வாய்ந்த திருவியலூர்த் திருக்கோயிலின். கருவறை, இராசராசனால் கற்றளியாகக் கட்டப்பட்டது. இதன் தென்புறச் சுவரில் சிவலிங்கம் ஒன்றை வழிபடும் நிலையில் இராசராசன் மற்றும் அவரது தேவியான உலகமாதேவி ஆகியோருடை படிமங்கள் இடம்பெற்றிருந்தன. பின்னாளில் இக்கல் இயற்கையாகச் சிதைந்து உருவங்கள் தெளிவில்லாமல் போயின.

கோவிலைப் புதுப்பித்த அறம் உள்ளம் கொண்டோர் இப்படிமத்தின் பெருமையறிந்து சிதைந்த சிற்பத்தினை ஒத்த நகலாகப் புதிய சிற்பங்களைத் தென்புறச் சுற்றில் இடம்பெறச் செய்தனர். இதில் மாலை இடப்பட்ட ஓர் இலிங்கமும் அதன் முன்பு முக்காலியின் மேல் வலம்புரிச்சங்கும் உள்ளன இலிங்கத் திருமேனியை இடுப்பில் அரையாடையும். தலையில் கொண்டையும் எடுப்பான மீசையும் நிகழ திகழ மாமன்னன் இராசராசனின் வணங்கும் கோலப் படிமமும், அருகே அழகிய ஆடையும், காதில் குண்டலங்களும் எழில் செய்யும் கொண்டையும் திகழ, உலகமாதேவியின் படிமமும் காணப்படுகின்றன.

### புராணப் பின்னணி

இத்தலத்தில் சிவபெருமான் விஷ்ணு மூர்த்தியுடன் கோவில் கொண்டுள்ளார். இத்தலம் ஆதியில் வில்வ காடாயிருந்தமையால் "வில்வ வனம் மென்றும்" எல்லா ஷேத்திரங்களுக்கெல்லாம் முன்னர் தோன்றிய பழமையாலும் புராதனன் என்ற இராவுதன் இங்கு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுடைய, சன்னதியில் இருந்து சிவபதம் பெற்றமையால் "புராதன புரமென்றும்" வழங்கப்படுகிறது, சிவயோகி என்ற முனிவரும் ஏழு சகோதரர்களும் கடும் தவம் செய்து சிவனுடன் ஐக்கியமானதால் இவரது லிங்க திருமேனியில் ஏழு சடைகள் காணப்படுகின்றன. அதனால் சிவயோகிநாதர் என்ற பெயருடன் அழைக்கப்படுகின்றார். ரிஷபம் எனப்படும் நந்தியுடன் தொடர்புடைய ரிஷபராசி ஸ்தலமாகவும் விளங்குகிறது.

### சிற்பங்கள்

இக்கோயிலில் முதலில் ராஜகோபுரம் பின்னர் நந்தி அதற்கு அடுத்தபடியாக கொடிமரம் அதற்கு வலப்பக்கத்தில் சௌந்தரநாயகி அம்மன் சன்னதி தனியாக உள்ளது சன்னதியின் மையப்பகுதியில் ஈசானிய மூலையில் நான்கு பைரவர்கள் உள்ளனர். கர்ப்பகிரக பக்கவாட்டு சுவற்றில் விநாயகரும் தட்சிணாமூர்த்தியும் மேற்கு பார்த்த நிலையில் விஷ்ணுவும் கர்ப்பக்கிரக இடப்பக்கத்தில் பிரம்மனும் துர்க்கையும் எதிரே சண்டிகேஸ்வரரும் அதே பிரகாரத்தில் வடக்கு பார்த்த நிலையில் சப்தமாதர்களும் அதே வரிசையில் உய்யவந்த நாயனார், திருஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், நைருதி விநாயகரும், லகஷ்மி நாராயணரும் வள்ளி முருகன் தெய்வானை மற்றும், கஜலட்சுமி போன்ற படிமங்கள் இத்தலத்தில் உள்ளன.

**கல்வெட்டுச் செய்திகள்**

திருவிசலூர் கோயில் கோபுரம் திருச்சுற்று மாளிகை சோழர் படைப்பிரிவைச் சார்ந்த வலங்கை வேலைக்காரர் கட்டியுள்ளனர். விக்கரம சோழனும் இங்குள்ள கோபுரம் ஒன்றைக் கட்டியுள்ளார். இரண்டாம் வரகுண பாண்டியன் கல்வெட்டோடு வரலாற்றுச் சிறப்புமிக்க ஏராளமான சோழமன்னர்கள், சோழ அரசிகள், சோழ அதிகாரிகள் என்று பலர் நிலக்கொடைகள், விளக்குக் கொடைகள் வழங்கப்பட்டுள்ளதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இக்கோயிலில் இதுவரை 100-க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் முழுமையாகப் படியெடுக்கப்பட்டுத் தென்னிந்திய கோயில் சாசனத்தொகுதியில் வெளியிடப்பட்டுள்ளன. சோழர்களின் கீழ் அவர்களுக்கு பெருந்துணையாக விளங்கிய கொடும்பாலூரைத் தலைநகராகக்கொண்டு ஆட்சிபுரிந்த இருக்குவேள் மரபினர் இக்கோயிலுக்கு நிவந்தங்கள் அளித்துள்ளனர்.

ஆயிரத்து இருநூறு வருடங்கள் பழமைவாய்ந்த இக்கோயில் ஆகமங்களின் விதிகளின்படி அமைக்கப்பட்டுப் புராணப்பின்னணிக்கும் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. இக்கோயில் சோழர்களின் வரலாற்றுப் பின்னணியில் சிற்பங்களிலும் பல்வேறுபட்ட ஒற்றுமைகள், மாறுபட்ட கலைக்கூறுகளைக் காணமுடிகிறது. சோழர்களின் கலைப்பாணியில் ஏற்பட்ட வளர்ச்சி மாற்றங்களை ஆய்ந்திடும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

**குறிப்புகள்**

1. சொ. வேலுச்சாமிக் கவிராயர், திருவியலூர்ப்புராணம், சாரதாவிலாஸ் பிரஸ், கும்பகோணம், 1933.
2. பி. ரா. நடராசன், திருஞானசம்பந்தர் தேவாரம், உமா பதிப்பகம், சென்னை, 2004, ப. 458
3. மு.இராகவைங்கார், வேளிர் வரலாறு, ஜெனரல் பிரிண்டர்ஸ், சென்னை, 1933, ப. 25
4. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, சோழர் கோயிற் பணிகள், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1948, பக். 33, 34 & 35.
5. குடவாயில் பாலசுப்ரமணியன், சோழமண்டலத்து வரலாற்று நாயக்கர்களின் சிற்பங்களும் ஓவியங்களும் தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2010, பக். 106 & 107.
6. ARE NO. 3 of 1907
7. ARE NO. 7 of 1907
8. ARE NO. 12 of 1907
9. ARE NO. 42 of 1907
10. ARE NO. 52 of 1907
11. ARE NO. 315 of 1907
12. ARE NO. 341 of 1907
13. S.R பாலசுப்ரமணியம், முற்காலச் சோழர்கலையும் சிற்பமும், தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு அரசாங்கம், 1966, பக். 161, 162 & 163.